*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p177-187**| Available online: www.tamilmanam.in

*Original Research Paper*

# ‘அகநானூறு வெளிப்படுத்தும் தமிழர் பண்பாட்டு மரபில் நீத்தார் ஆன்மா பற்றியக் கோட்பாடு’

‘The Doctrine of the Departed Soul in the Cultural Traditions of Tamils as Reflected in Agananuru’

**Dr. K. Anthony Raja***,

*Assistant Professor of Tamil, St. Joseph’s College,*
*Tiruchirappalli - 02*
*Email: anthonyraja_ta1@mail.sjctni.edu*

*Article history*
Received: 25-07-2026
Revised: 29-07-2026
Accepted: 30-07-2026

*Corresponding Author Email:
*anthonyraja_ta1@mail.sjctni.edu*
*Tel: +919176171537*

**Abstract:** The soul is a divine energy operating within the human body. Even after the death of our physical body, the soul remains indestructible, preserving its essence to continue forever. As an embodiment of the divine, this soul conquers death and possesses an eternal nature, functioning in union with supreme divine power. Across global religious and philosophical traditions, the soul is viewed as the fundamental core of living beings. Such understandings of the soul and funerary rites were deeply rooted in ancient Tamil society as well. Classical Tamil literature extensively documents the beliefs of Tamils regarding final rites and the soul. The objective of this article is to explore and reveal the theories held by ancient Tamils concerning the souls of the departed through the poems of Agananuru, one of the Ettuthokai anthologies.

**Keywords:** *Herostone, Funeral rites, Soul of the departed, Megalithic monument, Deceased, Burial Urn, Morchhal, Worship, Doctrine*.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

மனித உடலுக்குள் இயங்கும் தெய்வீகத் தன்மையைக் கொண்ட சக்தியே ஆன்மாவாகும். நமது உடலின் இறப்பிற்குப் பின்பும் அழியாமல் நிலைத்திருந்து ஆன்மா தனது தன்மையை மாற்றிக்கொள்ளாமல் என்றென்றும் தொடரும். இறைவனின் அம்சமாக விளங்கும் இந்த ஆன்மா மரணத்தை வென்று நிரந்தரமாக நிலைத்திருக்கும் தன்மையது. தெய்வ சக்தியோடு இணைந்தே இயங்குகிறது. உலகளாவிய மதம் மற்றும் தத்துவ மரபுகளில் ஆன்மா என்பது உயிரினங்களின் அடிப்படையான உட்கூறாகப் பார்க்கப்படுகிறது. இத்தகைய ஆன்மா குறித்த புரிதல்களும் ஈமச்சடங்கு முறைகளும் பண்டைய தமிழ்ச் சமூகத்திலும் ஆழமாக வேரூன்றியிருந்தன. செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் இறுதிச் சடங்குகள் மற்றும் ஆன்மா குறித்த நம்பிக்கைகளை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றுப் பாடல்களின் வாயிலாக, பண்டைய தமிழர்கள் நீத்தார் ஆன்மா தொடர்பாகக் கொண்டிருந்த கோட்பாடுகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சிக் காலத்திலேயே பழந்தமிழர்கள் உடல் வேறாகவும், ஆன்மா வேறாகவும் இயங்குகிறது என்ற தெளிவான மெய்யியல் புரிதலைப் பெற்றிருந்தனர். உடல் அழிவைச் சந்தித்தாலும், அதற்குள் இயங்கிய ஆன்மா ஒருபோதும் அழிவதில்லை என்ற ஆழமான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். சங்க காலத்தில் நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போர்க்களத்தில் உயிர்த்தியாகம் செய்யும் வீரர்களின் ஆன்மாக்கள் சாதாரண மரணத்தை விடச் சிறப்புடையதாகக் கருதப்பட்டன.

வீரர்களின் உடல் மறைந்தாலும் அவர்களின் வீரம் செறிந்த ஆன்மா இவ்வுலகில் நிலைத்து நின்று தங்களின் வழித்தோன்றல்களையும் ஊரையும் பாதுகாக்கும் என்ற கருத்து சங்க காலத்தில் வேரூன்றியிருந்தது.இறந்த வீரர்களின் நினைவாக எடுக்கப்படும் நடுகற்களை வெறும் கல்லாகப் பார்க்காமல், அதில் வீரர்களின் ஆன்மா நிரந்தரமாகக் குடியிருக்கிறது என்றே தமிழர்கள் நம்பினர். அந்த நடுகற்களைத் தெய்வமாகப் போற்றி வழிபடும் முறை மூலமாக, ஆன்மா மரணத்திற்குப் பின்பும் உயிர்வாழ்கின்றது என்ற தங்களின் நம்பிக்கையை அவர்கள் நடைமுறைப்படுத்தினர். நடுகற்களில் ஆன்ம வடிவில் வாழும் வீரர்களுக்குத் தூய நீரால் அபிடேகம் செய்தும், சிறிய குடில்களில் கள் காய்ச்சிப் படையலிட்டும் தமிழர்கள் வழிபட்டனர். நறுமண எண்ணெயைக் கொண்டு விளக்கேற்றி, அந்தப் புகை ஊரின் தெருக்களில் கமழச் செய்ததன் மூலம் இறந்தவர்களின் ஆன்மாக்களை மகிழ்வித்து, அவற்றுக்குத் தங்களின் நன்றியைத் தொடர்ந்து வெளிப்படுத்தினர்.

இறந்தவர்களின் ஆன்மா இவ்வுலகில் சுற்றித்திரிந்து தனது ஆன்ம வாழ்வைத் தொடரும் என்ற பழந்தமிழர்களின் ஆன்மவியல் மற்றும் இறப்புக்குப் பிந்தைய வாழ்வு குறித்த உயர்வான மெய்யியல் கோட்பாட்டை அகநானூற்றுப் பாடல்கள் வாயிலாக இக்கட்டுரை ஆராய்கின்றது.

**கலைச்சொற்கள்**

பெருங்கற்படை, ஈமச்சின்னம், தாழி, கல்திட்டை, கற்குவை, பீலி, கற்கிடை, கோட்பாடு, பேழை, ஆன்மா, நீத்தார், வாழ்வியல்

**பண்டைத் தமிழரின் வாழ்வியலில் நீத்தார் வழிபாடு**

உயிர்நீத்த முன்னோர்களை வணங்கும் நீத்தார் வழிபாடு தமிழர்களின் மிகத் தொன்மையான பண்பாட்டு அடையாளமாகும். உலகப் புகழ்பெற்ற மேலைநாட்டுத் தத்துவமேதைகள் பலர் ஆன்மாவின் தன்மையை விளக்கப் பல்வேறு கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். ஒவ்வொரு மதமும் ஆன்மாவை உடல், ஆன்மீகம் மற்றும் இறைவனின் பிரிக்க முடியாத அங்கமாகக் கருதுகிறது.

**'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்' (இல்வாழ்க்கை : குறள் - 50)**

என்ற திருக்குறளின்படி, அறநெறியில் வாழ்ந்த மனிதர்கள் வானுலகில் தெய்வத்திற்கு நிகராக மதிக்கப்படுவர். இக்கொள்கையின் நீட்சியாகவே மூத்தோரை வழிபடும் முறை தோன்றியது. சமுதத்திற்காகப் போராடி வீரம் மரணம் அடைந்தவர்களைத் தெய்வமாக வணங்கும் வழக்கம் தமிழர்களிடம் தொல்காப்பியர் காலம் முதல் தொடர்கிறது. நம்மைப் பாதுகாத்து மறைந்த வீரர்களை மூத்தோராக ஏற்று, தலைமுறை தலைமுறையாக வழிபட்டு வந்த நடுகல் வழிபாடே பிற்காலத்தில் கிராமிய மற்றும் குலதெய்வ வழிபாடுகளாக உருமாறியது.

அகநானூற்றுப் பாடல்கள், உயிர் நீத்த வீரர்களின் பெயரும் புகழும் செதுக்கப்பட்டு, மயில் இறகுகள் கட்டப்பட்ட கேடயங்களும் வேல்களும் ஏந்தப்பட்ட நடுகற்கள் அமைக்கப்பட்ட முறையை விளக்குகின்றன. இந்நடுகற்களுக்குத் தூய்மையான நீரால் நீராட்டி, சிறு குடில்களில் கள் தயாரித்து தினமும் படைக்கும் வழக்கம் இருந்தது. நறுமணத் தைலமிட்டு விளக்கேற்றப்பட்டதன் மூலம் எழும் புகை நாற்றிசையிலும் கமழ்ந்தது என்று கூறுமிடத்து 'இறந்தவரின் ஆன்மா இவ்வுலகிலேயே உலாவிக் கொண்டிருக்கும் என்றும், உடலற்ற ஆன்ம வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும்' என்றும் பண்டைத் தமிழருடைய கோட்பாட்டை எடுத்துரைக்கின்றன.

**ஈமச் சடங்கும் ஆன்மா பற்றிய நம்பிக்கையும்**

ஆன்மவியல் என்பது மனிதனின் ஆன்மா, அதன் தன்மை மற்றும் அதன் இயல்புகளைப் பற்றி ஆராயும் ஒரு தத்துவக் துறையாகும். இது பௌதிக உடலிலிருந்து ஆன்மா எவ்வாறு வேறுபட்டது என்பதையும் அதன் பிரிக்க முடியாத தனித்தன்மையையும் விரிவாக விளக்குகிறது. உடலின் மரணத்திற்குப் பிறகும் ஆன்மா எவ்வித அழிவுமின்றி நிலைத்து நின்று இயங்குகிறது என்ற மெய்யியல் உண்மையை இது முன்வைக்கிறது. உயிர், உணர்வு, மனம் மற்றும் ஆன்மாவிற்கு இடையேயான நுட்பமான வேறுபாடுகளைப் பகுப்பாய்வு செய்து தெளிவுபடுத்துகிறது. மனித வாழ்வின் உண்மையான நோக்கம் என்னவென்பதை ஆன்மாவின் வழியே கண்டறிய மனிதனுக்குத் வழிகாட்டியாக அமைகிறது. ஆன்மா பற்றிய ஆய்வு பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு நாகரிகங்களிலும் சிந்தனையாளர்களாலும் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வந்துள்ளது.

சங்க காலத்திற்கும் முற்பட்ட பெருங்கற்கால மக்கள் தங்களது குடியிருப்புகளுக்கு அருகில் தனி இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு இறந்தவர்களை அடக்கம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். பிணங்களையும் எலும்புகளைப் புதைக்கும் இடங்களிலும் பெரும் பாறைகளைக் கொண்டு ஈமச்சின்னங்களை எழுப்பும் மரபு உலகம் முழுவதும் பரவலாக இருந்தது. புதிய கற்காலத்தின் முடிவு மற்றும் பெருங்கற்கால முழுமைக்கும் இத்தகைய சடங்குகள் ஒரு சமூக நிகழ்வாகவே நடந்துள்ளன. இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தில் பெரிய கற்களைக் கொண்டு சின்னங்கள் உருவாக்கப்பட்டதால் இக்காலம் 'பெருங்கற்காலம்' என்று அழைக்கப்படுகிறது.

இக்கால மனிதர்கள் ஆன்மாவின் அழியாநிலை குறித்துப் பல நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். மனித உடல் அழிந்துவிட்டாலும் ஆன்மா அழிவற்றது என்றும், அது அருவமான வடிவில் தொடர்ச்சியாக இயங்கும் என்றும் நம்பினர். இதனால் இறந்தவர்களின் உடலோடு அவர்கள் வாழ்நாளில் பயன்படுத்திய பொருட்கள், உணவு வகைகள் மற்றும் மட்பாண்டங்கள் அனைத்தையும் சேர்த்துப் புதைத்தனர். அடக்கம் செய்யப்பட்டவர்களின் ஆன்மா எளிதில் வெளியே சென்று வரும் என்ற எண்ணத்தால், கல்லறையின் கிழக்குப் பக்கப் பலகைக் கல்லில் வட்ட வடிவிலான துளையைப் பரிமாற்றத்திற்காக அமைத்தனர். 'இறந்த பின்னர் ஆன்மா வடிவில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையினால் அந்த ஆவிகள் கல்லறையினுள் வந்துசெல்வதற்காக பெருங்கற்படையில் உள்ள பக்கவாட்டுக் கல்லில் வட்ட வடிவில் துளையிடப்பட்டது' (இராசவேலு சு, தொல்லியல் சுடர்கள், பக்-38)

உயிர் நீத்தவர்களின் ஆன்மாக்கள் தங்களின் பழைய உறவினர்களைச் சந்திப்பதற்கும், தங்களுக்குச் செய்யப்படும் சடங்குகளைப் பார்வையிடுவதற்கும் இத்தகைய துளைகள் பெரிதும் உதவியாக இருக்கும் என்று நம்பினர். ஆன்மாவானது பசியும் தாகமும் எடுக்கக்கூடிய ஒரு நுண்ணிய வடிவமாக இயங்குகிறது என்ற எண்ணம் அக்கால மக்களிடையே பலமாக வேரூன்றியிருந்தது. இதன்

காரணமாகவே தாழிகளுக்குள்ளும் பதுக்கைகளுக்குள்ளும் குடிநீரும் உணவும் தொடர்ந்து வைக்கப்படும் சடங்குகள் வழக்கத்திற்கு வந்தன. ஆன்மாக்களின் பயணம் தடைபடக்கூடாது என்பதற்காகப் பயண வழிகளில் கற்களை அடுக்கி ஈமச்சின்னங்களை எழுப்பும் வழக்கம் சமூகக் கடமையாகக் கருதப்பட்டது. இறந்தவர்களின் ஆன்மாக்கள் அலைந்து திரிந்து தீங்குகளை இழைத்துவிடக் கூடாது என்பதற்காகவே அவர்களுக்குரிய ஈமச்சடங்குகளும் வழிபாடுகளும் தவறாமல் செய்யப்பட்டன.

**ஈமச் சின்னங்களின் வகைகள்**

பண்டைய தமிழர்கள் தங்களது இறந்த முன்னோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவர்களின் உடல்களைப் பாதுகாப்பாக அடக்கம் செய்யும் நோக்கத்துடனும் பல்வேறு வகையான ஈமச்சின்னங்களைச் செவ்வனே அமைத்தனர். நிலப்பரப்பின் தன்மை, சமூக நிலை மற்றும் அந்தந்த காலக்கட்டத்தின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப கற்பதுக்கை, கல்திட்டை, கற்குவை, கல்கிடை, கல்வரிசை, குடைக்கல், தொப்பிக்கல், குடைவரைத் தாழ்வரைகள், குத்துக்கல், நெடுங்கல் மற்றும் முதுமக்கள் தாழி எனப் பல வடிவங்களில் இச்சின்னங்கள் காணப்பட்டன. பொதுவாகப் புதைக்கும் வழக்கம் கொண்ட காலங்களில், தரையில் ஆழமாகச் குழியைத் தோண்டி அதனுள் இறந்த உடலைப் படுக்கவைத்து அடக்கம் செய்வர். அதன் பின்னர் அப்பகுதியின் அடையாளத்திற்காக அதன் மீது பலகைக் கற்களையோ அல்லது இயற்கையாக உருண்ட பெரிய பாறைக் கற்களையோ கொண்டு நினைவுச்சின்னங்களை முறைப்படி அமைப்பார்கள்.

இத்தகைய ஈமச்சின்னங்களில் 'கற்பதுக்கை' மற்றும் 'கல்திட்டை' என்பவை மிக முக்கியமான இரட்டை அமைப்புகளாக விளங்கின. இவை பல பெரிய கற்பலகைகளைக் கொண்டு அறைகளைப் போன்ற அமைப்பில் நிலத்தின் மீது அல்லது சற்று குழிவான பகுதியில் உருவாக்கப்படும். இறந்தவர்களின் உடல்களோ அல்லது எலும்புக் கூடுகளோ இத்தகைய கல் அறைகளுக்குள் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. மேலும், காடுகளிலும் மலைப்பகுதிகளிலும் செல்லும் வழிகளில் மனிதர்களின் நினைவாகக் கற்களைக் குவித்து உருவாக்கப்பட்ட கற்குவைகளும், வரிசையாக நடப்பட்ட நெடுங்கற்களும் வழிப்போக்கர்களுக்கு நினைவூட்டலையும் தெய்வ நம்பிக்கையினையும் வழங்கின. தொப்பிக்கல் மற்றும் குடைக்கல் போன்ற அமைப்புகள் பாறைகளைக் கொண்டு வெட்டப்பட்டும் விசித்திரமான வடிவங்களில் உருவாக்கப்பட்டிருந்தன. இத்தகைய பல்வேறு ஈமச்சின்ன அமைப்புகள் வெறும் கல் கட்டமைப்புகள் மட்டுமல்லாமல், இறந்தவர்களின் ஆன்மா தங்குவதற்கான ஆன்மீகக் கூடங்களாகவேபண்டைய தமிழர்கள் தங்களது இறந்த முன்னோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவர்களின் உடல்களைப் பாதுகாப்பாக அடக்கம் செய்யும் நோக்கத்துடனும் பல்வேறு வகையான ஈமச்சின்னங்களைச் செவ்வனே அமைத்தனர்.

நிலப்பரப்பின் தன்மை, சமூக நிலை மற்றும் அந்தந்த காலக்கட்டத்தின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப கற்பதுக்கை, கல்திட்டை, கற்குவை, கல்கிடை, கல்வரிசை, குடைக்கல், தொப்பிக்கல், குடைவரைத் தாழ்வரைகள், குத்துக்கல், நெடுங்கல் மற்றும் முதுமக்கள் தாழி எனப் பல வடிவங்களில் இச்சின்னங்கள் காணப்பட்டன. பொதுவாகப் புதைக்கும் வழக்கம் கொண்ட காலங்களில், தரையில் ஆழமாகச் குழியைத் தோண்டி அதனுள் இறந்த உடலைப் படுக்கவைத்து அடக்கம் செய்வர். அதன் பின்னர் அப்பகுதியின் அடையாளத்திற்காக அதன் மீது பலகைக் கற்களையோ அல்லது இயற்கையாக உருண்ட பெரிய பாறைக் கற்களையோ கொண்டு நினைவுச்சின்னங்களை முறைப்படி அமைப்பார்கள்.(கணபதி இளங்கோ,பண்டையத் தமிழர் வாழ்வியல், பக்-63)

இத்தகைய ஈமச்சின்னங்களில் 'கற்பதுக்கை' மற்றும் 'கல்திட்டை' என்பவை மிக முக்கியமான இரட்டை அமைப்புகளாக விளங்கின. இவை பல பெரிய கற்பலகைகளைக் கொண்டு அறைகளைப் போன்ற அமைப்பில் நிலத்தின் மீது அல்லது சற்று குழிவான பகுதியில் உருவாக்கப்படும். இறந்தவர்களின் உடல்களோ அல்லது எலும்புக் கூடுகளோ இத்தகைய கல் அறைகளுக்குள் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. மேலும், காடுகளிலும் மலைப்பகுதிகளிலும் செல்லும் வழிகளில் மனிதர்களின் நினைவாகக் கற்களைக் குவித்து உருவாக்கப்பட்ட கற்குவைகளும், வரிசையாக நடப்பட்ட நெடுங்கற்களும் வழிப்போக்கர்களுக்கு எச்சரிக்கையையும் நினைவூட்டலையும் வழங்கின. இத்தகைய பல்வேறு ஈமச்சின்ன அமைப்புகள் வெறும் கல் கட்டமைப்புகள் மட்டுமல்லாமல், இறந்தவர்களின் ஆன்மா தங்குவதற்கான ஆன்மீகக் கூடங்களாகவே கருதப்பட்டுப் பண்டைய தமிழர்களால் போற்றப்பட்டன.

**அகநானூற்றில் ஆன்மா பற்றிய கோட்பாடுகள்**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு அகப்பொருள் சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்ட நூலாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களை விவரிக்கிறது. இப்பகுதி பல்வேறு காலங்களைச் சேர்ந்த பல புலவர்களால் பாடப்பட்ட பெருமையைக் கொண்டது. குறிப்பாக, முல்லை மற்றும் குறிஞ்சி நிலங்கள் இளவேனில் மற்றும் முதுவேனில் காலத்தில் வறண்டு செழுமையிழந்து காணப்படும் போது, அவை 'பாலை நிலம்' என்று அழைக்கப்படுகின்றன.

அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில், பொருள் தேடுவதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு பயணம் செய்யும்போது, வறண்ட காடுகளையும் அரிதான பாலை வழிகளையும் கடந்து செல்வது பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வழிகளை 'அழல் அவிர் அருஞ்சுரம்', 'ஈரமில் வெஞ்சுரம்', 'கோட்சுரம்' எனப் புலவர்கள் பல இடங்களில் வர்ணித்துள்ளனர்;

மேலும், சுரம் சார்ந்த வழிகளில் உள்ள மலைகளின் தன்மையையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இத்தகைய கொடிய வெஞ்சுரத்தைக் கடந்து செல்லும் தலைவன் காணும் காட்சிகளும், அவனை அச்சுறுத்தும் பல்வேறு சூழல்களும் புலவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள், பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஈமச்சின்ன வகைகளில் ஒன்றான 'கற்பதுக்கை' எனப்படும் பெருங்கற்படைச் சின்னங்கள் குறித்த செய்திகள் பாலைத்திணைப் பாடல்களில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

**‘வெண்ப னைஅம்பின் விசை இட வீழ்ந் தோர்**
**எண்ணு வரம்பு அறியா உவ லிடுப துக்கை’ (அகநானூறு -109, 7:8)**

என்று, போர்க்களத்தில் கூர்மையான அம்புபட்டு இறந்துபட்ட வீரர்களுக்காக அமைக்கப்பட்ட பதுக்கைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

**‘இரலை சேக்கும் பரலுயர் பதுக்கை**
**கடுங்கண் மழவர் களவு உழவு எழுந்த**
**நெடுங்கால் ஆசினி ஒடுங் காட்டு’ (அகநானூறு -91, 10:12)**

என்று, வறண்டுகிடக்கும் பரந்த காட்டுப்பகுதியில் ஆறலைக்கள்வர்கள் சுற்றித்திரியும் இடத்தில், பரல்கற்களால் உயர்ந்த கற்பதுக்கைகள் இருந்தன என்று குறிப்பிடுகின்றது.

**நுழை நுதி நெடு வேல், குறும் படை, மழவர்**
**முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த 5**
**வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்**
**வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,**
**நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்**
**போக்கு அருங் கவலைய புலவு நாறு அருஞ் சுரம் (அகநானூறு -35, 4:10)**

என்று, கரந்தைப் போரில் வெற்றி பெற்ற பின், போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்காகப் பதுக்கைகள் உருவாக்கப்பட்டு, அவற்றுக்கு நடுவே நடுகல் நட்டுச் செய்யப்படும் வழிபாட்டு முறைகளை இப்பாடல் அடிகள் விவரிக்கின்றன. மேலும், புலால் நாற்றம் வீசும் அத்தகைய பதுக்கைகள் அமைந்துள்ள இடங்கள், அந்த வழியே செல்வோருக்குப் பெரும் அச்சத்தைத் தரும் வகையில் இருந்தன என்றும் குறிப்பிடுகிறது.

**வீளை அம்பின் விழுத் தொடை மழவர்**
**நாள் ஆ உய்த்த நாம வெஞ் சுரத்து**

**Article DOI: https://doi.org/10.63300/tm12032026.14**

**நடை மெலிந்து ஒழிந்த சேண் படர் கன்றின்**

**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**

**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்**

**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகநானூறு -131, 6:11)**

மதுரை மருதன் இளநாகனார் பாடியுள்ள இப்பாடல் அடிகளில், நடுகல் அமைந்துள்ள கோயிலில் வேலும் கேடயமும் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் காட்சியும், அதன் வழியே செல்வோருக்குப் பகையாளிகள் போருக்கு வருவது போன்ற தோற்றம் ஏற்படும் சூழலும் விவரிக்கப்பட்டுள்ளன. வழிப்பக்கத்திலிருக்கும் இந்நடுகல், மழவர்கள் கவர்ந்து சென்ற பசுக்கூட்டத்தில் சிக்கிய தாய்ப்பசுவைத் தொடர முடியாமல் நின்று கண்ணீர் சிந்திய கன்றுக்காக அவர்களுடன் போராடி உயிர் துறந்த வீரனுக்காக நடப்பட்டதாகும். வீரனின் ஆன்மா உலவும் அவ்விடத்தில், அவனது நடுகல்லுக்கு மயில் பீலியும் சூட்டி, அவனது பெயரும் பெருமையும் பொறிக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுவதை இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன.

**'நல்லமர்க் கடந்த நாணுடைமறவர்**

**பெயரும் பீடும் எழுதியதர் தொறும்**

**பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்**

**வேல்வஊன்று பலகை வேற்று முனைகடுக்கும்**

**உவல்இடி பதுக்கைஆள்உகு பறந் தலை**

**இலங்கு பரல் இமைக்கும்" (அகநானூறு -67, 8:17)**

என்று, ஆநிரைகளைக் மீட்கும் கரந்தைப் போரில் உயிர் துறந்த வீரர்களுக்கு அமைக்கப்படும் பதுக்கைகளும், அவற்றுடன் கூடிய நடுகற்களும் குறித்து இப்பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும், அந்தப் பாதைகளில் உள்ள பதுக்கைகளின் மீது குவித்து வைக்கப்பட்டுள்ள பரல் கற்கள் சூரிய ஒளியில் மின்னிக் கொண்டிருக்கும் தன்மையையும் இவை விளக்குகின்றன.

**"விழுத் தொடைமறவர் வில்இட வீழ்ந் தோர்**

**எழுத் துடைநடுகல் இன்நிழல் வதியும்**

**அருஞ் சுரக்கவ ரைநீந்தி "(அகநானூறு -53, 10:12)**

இப்பாடல் அடிகள், கடப்பதற்கு அரிதான வெஞ்சுரங்களில் மறவர்களின் கூரிய அம்பினால். இறந்த வீரர்களுக்கு எழுப்பப்பட்ட நடுகற்களில் வீரர்களின் பெயரும் புகழும் எழுதப்பட்டிருக்கும் என்று குறிப்பிடுகின்றது.

**"செருவேட்டுச்சிலைக்கும் செங்கண் ஆடவர்**

**வில்லிடவீழ்ந்தோர் பதுக்கை " (அகநானூறு -157, 7:8)**

தலைவன் கடந்து செல்லும் கொடிய சுரப்பாதையில், சிவந்த கண்களை உடைய வீரர்களின் அம்புகளால் வீழ்த்தப்பட்டு இறந்தவர்களுக்காக உருவாக்கப்பட்ட பதுக்கைகள் எங்கு பார்த்தாலும் நிறைந்திருக்கும் என்று இப்பாடல் அடிகள் சுட்டிக் காட்டுகின்றன.

**வடிநவில் அம்பின் வெல்ஆடவர்**

**ஆளழித்துஉயர்த்த அஞ்சுவருபதுக்கை' (அகநானூறு -215, 10:11)** என்றும்,

**'மல்லல் மொசிவிரல் ஒற்றிமணி கொண்டு**

**வல்வாய்ப் பேடைக்குச் சொரியும' (அகநானூறு -215, 14:15)**

இவ்வாறு இறங்குடிக் குன்றநாடன் என்ற புலவர் பாடியுள்ள இப்பாடலில், வழிப்போக்கர்களை மறவர்கள் தங்கள் அம்பின் முனையால் கொன்றுவிட்டு, அவர்களின் உடல்களை ஒன்றாகக் குவித்து அதன் மீது பரல் கற்களை நிரப்பிப் பதுக்கை அமைப்பர் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி உருவாக்கப்பட்ட பதுக்கையின் மேல் அமரும் வலிய எருவை எனப்படும் மாமிச உண்ணிப் பறவை, அங்கிருக்கும் கற்களைத் தோண்டி, பிணங்களின் கண்களைத் தன் பலம் வாய்ந்த சிவந்த அலகால் கொத்தி எடுக்கும் கொடூரமான காட்சியையும் இப்பாடல் அடிகள் பதிவுசெய்துள்ளன .

**'கொடு விற்கானவர் கணை இடத் தொலை தோர்**

**படுக ளத்த உயர்ந்த மயிர்த் தலைப் பதுக்கை**

**கள்ளி யம்றந்தலைக் களர் தொறும்இ ழீது"[11] (அகநானூறு -231, 5:7)**

மதுரை ஈழத்துப் பூதன்றேவனார் பாடியுள்ள இப்பாடல் அடிகளில் கொடிய வில்லேந்திய கானவர்களால் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட பதுக்கைகள், பாழிடங்களாக மாறிவிட்ட களர் நில வழிகள் எங்கும் செறிந்து காணப்படும் என்று விளக்குகின்றது.

**'சிலை ஏறட்ட கணைவீழ் வம்பலர்**

**உயர் பதுக்கு இவர்ந்தததர் கொடி அதிரல்**

**நெடு நிலைநடுகல் நாட்பலிக் கூட்டும்' (அகநானூறு -289, 1:3)**

இளங்கீரனார் பாடியுள்ள இப்பாடல் அடிகளில் வழியில் வழிப்பறிக் கள்வர்களால் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் மீது எழுப்பப்பட்ட கற்குவியல்களான கற்பதுக்கைகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ள நெடுமையான நடுகற்களின் மீது, அதிரல் பூங்கொடி படர்ந்துள்ள காட்சியைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு அகநானூற்றில் தலைவன் பொருளீட்டும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து, மலைகள் சூழ்ந்த வறண்ட நிலங்களைக் கொண்ட அச்சமூட்டும் காட்டு வழியே செல்லும்போது,

அத்தடங்கள் எங்கும் வழிப்பறிக் கள்வர்களால் கொல்லப்பட்டவர்களின் உடல்களைக் குவித்து உருவாக்கப்பட்ட கற்பதுக்கைகளும், போரில் வீரமரணம் எய்திய வீரர்களுக்காக நிறுவப்பட்ட நெடுங்கற்கள் கொண்ட பதுக்கைகளும் வழிநெடுகிலும் செறிந்து காணப்படுகின்றன. இத்தகைய கற்பதுக்கைகள் பழந்தமிழர்களின் பண்பாட்டுத் தடயங்களாக விளங்குகின்றன. அந்த வகையில், பழந்தமிழர்களின் நீத்தார் வழிபாட்டு முறைகளையும், அதில் ஆன்மா தொடர்பான கோட்பாடுகளையும் அகநானூறு தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

**முடிவுரை**

மூத்தோர் வழிபாடு என்பது தமிழர்களின் பண்பாட்டில் மேன்மை மிக்க வழிபாட்டு முறையாகும். பெருந்தெய்வங்கள் மக்களின் தெய்வ வழிபாட்டில் இடம் பெறாத காலங்களில் மூத்தோரை தெய்வமாக வணங்கும் வழக்கமே மரபாக இருந்து வந்தது. இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைக்கும் முறை பெருங்கற்காலத்திற்கு முன்பிருந்தே தமிழர் பண்பாட்டில் இருந்து வரும் வழக்கமாகும். புதைக்கும் போது இறந்தவர் அன்றாடம் பயன்படுத்திய பொருட்களையும் தாழிக்குள் உடலோடு சேர்த்து வைத்துப் புதைக்கும் வழக்கம் அக்காலத்தில் நிலவியது. இறந்தவர்களைத் தாழியினுள் வைத்துப் புதைக்கும் மரபானது தாய் தெய்வ வழிபாட்டினுடைய நம்பிக்கையினால் ஏற்பட்டது.

தாழியினுள்ளோ அல்லது பெருங்கற்படைக் கல்லறையினுள்ளோ இறந்தவர்களை வைத்துப் புதைக்கும் போது அவர்கள் பயன்படுத்திய பொருட்களை அவர்களோடு வைத்து புதைப்பார். மேலும் அதனோடு நூற்றுக்கணக்கான மண்பாண்டங்களில் உணவு பொருட்களை வைத்தும் அடக்கம் செய்வர். இதன் மூலமாக உடலின் இறப்பிற்குப் பின்பும் ஆன்மாவிற்குத் தொடர் வாழ்வு உண்டு என்ற கோட்பாட்டில் தமிழர்கள் மிக உறுதியான நிலைப்பாடு கொண்டிருந்தனர் என்பது வெளிப்படுகின்றது.

மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலம் ஆன்மாவின் பரிணாமப் பயணம் என்ற ஆன்மிகப் பார்வையைத் தமிழ்ச் சமூகம் பெற்றிருந்தது. ஈமச்சின்னங்களின் வழியாக மூத்தோரை நினைவுகூரும் பழக்கம் காலப்போக்கில் குலதெய்வ வழிபாட்டாகவும் கிராமிய வழிபாட்டு முறைகளாகவும் வளர்ச்சி பெற்றது. சங்க இலக்கியங்கள் காட்டும் இத்தகைய பண்பாட்டு எச்சங்கள் பழந்தமிழர்களின் ஆன்மீகக் கோட்பாட்டைஎடுத்துரைக்கின்றது. இன்றளவும் பண்டைத் தமிழரின் தொல்லியல் எச்சங்களும் இலக்கியச் சான்றுகளும் ஒன்றிணைந்து தமிழரின் ஆன்மா கோட்பாட்டைப் பறைசாற்றிவருகின்றது. எதிர்கால சந்ததியினர் தமது பண்பாட்டு வேர்களை அறிந்துகொள்ள அகநானூற்றுப் பாடல்கள் இன்றியமையாத வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன.

**துணைநூற் பட்டியல்**

[1]. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம் - எட்டுத்தொகை, மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு-2010.

[2]. இராசமாணிக்கனார் மா, தமிழர் நாகரிகமும் பண்பாடும் பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு – 1975

[3]. இராசவேலு சு., தொல்லியல் சுடர்கள், சேகர் பதிப்பகம்,சென்னை,

a. பதிப்பு-1998

[4]. இராசன் கா., தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி

[5]. நிறுவனம், சென்னை, பதிப்பு-2004

[6]. செல்லம் வே. தி., தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு-2006

[7]. காந்தி க, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி

[8]. நிறுவனம், தரமணி, சென்னை, பதிப்பு-1980

[9]. சண்முகம் பிள்ளை மு, சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலகத்

[10].தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு-1996

[11].கந்தையப்பிள்ளை ந.சி., *வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்*, புரோகிரேசிவ் அச்சகம், சென்னை, முதற்பதிப்பு: 2008.

[12].தங்கமணி ம. இரா., *தொல்லியல்*, கொங்கு பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு: 2011.

[13].வானமாமலை நா., *தமிழர் பண்பாடும் தத்துவமும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை –98, ஆறாம் பதிப்பு: 1990.

[14].முத்துராசபிள்ளை கோ. க., *கோவில்கள் களஞ்சியம் அறிமுகம்*, சீதை பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 1987.

[15].வேதாசலம் வெ., *தொல்லியல் சுவடுகள்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, முதல் பதிப்பு - 1990.